அசல் வழக்கு எண்.255/18 வா.சா.1 திரு.மெய்யப்பன் த/பெ: வேலு
தேதி : 29.04.2021

**குறுக்கு விசாரணை :**

நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் புல எண் 363/24 ஆகும். 8 ஏர்ஸ் விஸ்தீரணம் ஆகும். இன்றைய தேதியில் மேற்படி சொத்திற்கு 1ம் பிரதிவாதி வீரம்மாள் என்ற வீராயி பெயரில் பட்டா உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த பட்டா எண் 934 என்று சொன்னால் சரிதான். வீரம்மாள் என்ற வீராயி மலையப்பன் மகன் வேலுவின் மனைவி ஆவார் என்று சொன்னால் சரிதான். வேலுவின் மகன்தான் 2ம் பிரதிவாதி செல்லையா என்று சொன்னால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் என்ன கட்சி செய்கிறார்கள் என்று எனக்கு தெரியும். அந்த பிரதிவாதிகள் வழக்குச்சொத்து மலையப்பன் மகன் வேலுவிற்கு அரசாங்கத்தால் அசைண்மெண்ட் பட்டா மூலமாக கொடுக்கப்பட்ட சொத்து என கட்சி செய்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். மேலும் இந்த வழக்கு சொத்தில் எனக்கு உரிமையும் பாத்தியமும் அனுபவமும் இல்லை என்று அவர்கள் கட்சி செய்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். பட்டா எண் 934 மலையப்பன் மகன் வேலுவின் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பட்டா அதுதான். அது பி.வா.சா.ஆ 1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அசைண்மெண்ட் பட்டா மாஞ்சான்விடுதி கிராமத்தில் புலஎண்363/22 363/24 ஆகியவற்றிற்கு மலையப்பன் மகன் வேலு என்பவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அது பி.வா.சா.ஆ 2 ஆகும். அதன்பிறகுதான் பி.வா.சா.ஆ.1 மலையப்பன் மகன் வேலுவின் பெயரில் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த மலையப்பன் மகன் வேலு இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான். அவர் இறந்தபிறகு அவரது மனைவி 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பட்டா அதுதான். அது பி.வா.சா.ஆ 3 ஆகும். 934ம் என்ற எண் கொண்ட பட்டா எந்த காலத்திலும் என் பெயரிலோ என் தகப்பனார் பெயரிலோ ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 934 என்ற எண் கொண்ட பட்டா என் தகப்பனார் பெயரில் ஏற்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வழக்கு சொத்து சம்மந்தமாக வேறு ஆவணங்கள் ஏதும் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. 934 என்ற எண் கொண்ட பட்டா முதலில் மலையப்பன் மகன் வேலுவின் பெயரிலும் பின்னர் அவரது மனைவி பெயரிலும் உள்ளது என்று சொன்னால் எங்கள் பெயரிலும் உள்ளது. 934 என்ற எண் கொண்ட பட்டா என் தகப்பனார் மெ.வேலு பெயரில் உள்ளது. 934 என்ற எண் கொண்ட பட்டாவின் அடிப்படையில் தான் வழக்கு சொத்துக்கு நான் உரிமை கொண்டாடுகிறேன் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் 934 என்ற எண் கொண்ட பட்டா எந்த காலத்திலும் என் பெயரிலோ என் தகப்பனார் பெயரிலோ இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. பட்டா எண் 368 என் சித்தப்பா ரெங்கன் பெயரில் உள்ளது. மேற்படி பட்டா 368ல் கண்ட சொத்து அசைண்மெண்ட் பட்டா மூலமாக என் சித்தப்பாவிற்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். என் சித்தப்பாவிற்கு புலஎண் 363∴19ல் 16 ஏர்ஸ் அசைண்மெண்ட் பட்டாவாக கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதனடிப்படையில் தான் வா.சா.ஆ 3 ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களின் அசல் ஆவணம் என் கைவசம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வா.சா.ஆ 1 மற்றும் 2 வா.சா.ஆ 3 மற்றும் 4 யை வைத்து போலியாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து உட்பட என் அப்பா பெயருக்கு 363/22ம் என் சித்தப்பா பெயருக்கு 363/19ம் அசைண்ட்மெண்ட் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்த சர்வே நம்பரில் கண்ட சொத்துக்களுக்கு ரீசெட்டில்மெண்ட் அல்லது செட்டில்மெண்ட்க்கான அ பதிவேடு இது நாள் வரை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். அசைண்ட்மெண்ட்ல் கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கு ரீசெட்டில்மெண்ட்க்கான அ பதிவேட்டில் அதில் உரிமையாளர் பெயர் பதிவாகி இருக்கும் என்று சொன்னால் சரிதான். அதனை நான் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்று சொன்னால் சரிதான். அதனை பார்த்தால் வழக்கு சொத்து மெய்யப்பன் மகன் வேலுவிற்கு கொடுக்கப்பட்டதா என்பது தெரிந்துவிடும் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் பெயரில் வழக்கு சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டா எண் 934 ஆகும். அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ 2 தான். அதில் பட்டா எண் 367 என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பட்டா எண் 934ல் கண்ட சொத்துக்களுக்கு நாங்கள் உரிமை கொண்டாட வில்லை

என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ 5 என் தகப்பனார் பெயரில் வரி செலுத்தப்பட்டுள்ள வரி ரசீது என்று சொன்னால் சரிதான். அதில் பட்டா எண் 934 ல் கண்ட சொத்துக்களுக்கு வரிவிதிப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ 6 ல் 10.04.1986 ம் தேதியிட்ட வரிரசீதில் பட்டா எண் 934 காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 05.03.1988 ம் தேதியிட்ட வரிரசீதில் 934 என்ற எண் கொண்ட பட்டாவிற்கு வரி செலுத்தப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். இந்த வரி ரசீதில் பட்டா எண் 367 கண்ட சொத்திற்கு வரி விதிப்பு ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். 01.04.1989 ம் தேதியிட்ட வரிரசீதில் 934 என்ற எண் கொண்ட பட்டாவிற்கு வரி செலுத்தப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். இந்த வரி ரசீதில் பட்டா எண் 367 கண்ட சொத்திற்கு வரி விதிப்பு ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். 1399 பசலிக்கான வரிரசீதில் 934 என்ற எண் கொண்ட பட்டாவிற்கு வரி செலுத்தப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். இந்த வரி ரசீதில் பட்டா எண் 367 கண்ட சொத்திற்கு வரி விதிப்பு ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். 14.03.1998 ம் தேதியிட்ட வரிரசீதில் 934 என்ற எண் கொண்ட பட்டாவிற்கு வரி செலுத்தப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். இந்த வரி ரசீதில் பட்டா எண் 367 கண்ட சொத்திற்கு வரி விதிப்பு ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனது கட்சிப்படி என் தகப்பனாருக்கு அரசாங்கத்தால் தாவா சொத்துக்கு கொடுக்கப்பட்ட பட்டா 934 ஆகும்.

(பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்துவைக்கப்பட்டுள்ளது.)